## Record of Deposition of Witness

## In The Court of The District Munsif, Uthangarai

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 25.07.2023 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case | : | O.S.No. 2/2021 | CNR.No | : | TNKI13-000111-2020 |
| Name | : | வெங்கடேசன் | Father's Name | : | ஜெயராமன் |
| Witness for | : | Plaintiff | Calling | : | PW1 |
| Age | : | 40 | Village | : | கீழ்மத்தூர் |
| Taluk | : | ஊத்தங்கரை | District | : | கிருஷ்ணகிரி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது 2ம் இன வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் உள்ள சின்னராஜ் இறந்து எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் **10** வருடங்கள் இருக்கும். அவருக்கு குழந்தைகள் இருக்கிறார்களா என்றால் நாராயணன், பண்ணீர் மற்றும் கமலநாதன் ஆகிய 3 மகன்கள் இருக்கிறார்கள். எனது வழக்கு சொத்தை ஒட்டி யாருடைய பங்கு சொத்து உள்ளது என்றால் கமலநாதன் உடைய பாக சொத்து உள்ளது . கமலநாதன் உடைய பாக சொத்திற்கு தெற்கு பகுதியில் பண்ணீர் உடைய பாக நிலம் உள்ளது . அதன் கிழக்கு பக்கத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால் லலிதா உடைய நிலம் உள்ளது.

2. என் மீதும் எனது தந்தை மீதும் பண்ணீர் என்பவர் சிங்காரபேட்டை காவல் நிலைய **குற்ற எண்.816/2020** என்ற புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பண்ணீர் கொடுத்த புகாரின் பேரில் என் மீது , எனது தந்தை ஜெயராமன், எனது தாயார் இந்திராணி, எனது தங்கை சரசு, எனது அக்கா செல்வி, மற்றும் எனது அக்காவின் மகன் பூவரசன் ஆகியோர்கள் மேல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரானது 2-ம் இன வழக்கு சொத்து குறித்து தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த சர்வே எண் சொத்து குறித்து மேற்படி தகராறு ஏற்பட்டதாக புகார் அளிக்கப்பட்டது என்றால்

**சர்வே எண் .12/10 சி** சொத்தில் வரப்பு தகராறு காரணமாக பதிவு செய்யப்பட்டது.

3. சின்னராஜ் மகன் பண்ணீர் எனது சொத்தின் கிழக்கு பக்கத்தில் தான் உள்ளாரா என்றால் இல்லை தெற்கு பக்கத்தில் உள்ளார் . இந்த அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் புகார் கொடுக்கப்பட்டதா இல்லை அதற்கு பிறகா என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் வரப்பு பிரச்சனைக்காக தான் வழியில் செய்யக் கூடாது என புகார் கொடுத்தார் . நான் எவ்வளவு காலமாக அந்த வரப்பில் சென்று வருகிறேன் என்றால் அது **10 பேர்** சென்று வரும் வழியாகும் . அந்த நடபாதை வழி எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் சுமார் **2 அடி** அகலம் இருக்கும் . நான் நடைபாதை வழி என்று சொல்வது வண்டி வழி என்றும் அதில் தான் காலகாலமாக சென்று வந்தேன் என்றும் பண்ணீருக்கும் எனக்கும் ஏற்பட்ட தகராரின் காரணமாக பிரதிவாதிகள் வெளியூரில் குடியிருந்து வருவதை சாதகமாக பயன்படுத்தி அவர்கள் நிலத்தின் வழியாக பொய்யாக வழிபாத்தியம் உள்ளது என்று வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

4. பண்ணீர் புகார் கொடுத்த பிறகில் இருந்து நான் முருகன் வீட்டிற்கு அருகில் செல்லும் பாதையை தான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, இந்த வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து முருகனிடம் கேட்டு அவ்வழியாக நடந்து செல்கிறேன் . நான் என்னுடைய இடத்திலேயே டிராக்டர் வைத்து செட் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்திற்கு மேற்கு பக்கத்தில் குப்பன் என்பவருடைய சொத்து உள்ளது என்றால் சரிதான் . குப்பன் உடைய சொத்திற்கு மேற்கு பக்கத்தில் தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான் , தொலைவில் செல்கிறது . தார் ரோட்டில் இருந்து என்னுடைய சொத்து வரைக்கும் மண் ரோடு வருகிறது என்றால் சரியல்ல, அது குப்பன் வீடு வரைக்கும் தான் வருகிறது . மேற்படி குப்பன் வீடு எனது சொத்திற்கு மேற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி சொன்ன மண் ரோட்டை பயன்படுத்தி வருகிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக என்னென்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் காலகாலமாக 10 வீட்டுகாரர்கள் சென்று வந்த

வழியை கேட்டு தான் தாக்கல் செய்துள்ளேன் . நான் சொல்லும் 10 வீட்டுகாரர்கள் நான் சொன்னது போல் தற்போது பயன்படுத்தி வருகிறார்களா என்றால் இல்லை. அவர் அவர் ரோடு ஓரம் வீடு கட்டி உள்ளதால் தற்போது **4–5** வீட்டு காரர்கள் மட்டும் தான் பயன்படுத்தி வருகிறார்கள். நான் சொல்லும் அந்த **4–5** வீட்டுகாரர்கள் யார் என்றால் குப்பன், முருகேசன், இளையபெருமாள், கோவிந்தன், கோவிந்தசாமி, மாது, கொளந்தையம்மாள், மாணிக்கம் மற்றும் திருப்பதி ஆகியோர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி நபர்கள் 1ம் இன சொத்திற்கு எந்த திசையில் உள்ளார் என்றால் வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு திசைகளில் உள்ளார்கள். நான் சொல்லும் மேற்படி நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கிறீர்களா என்றால் இல்லை அவர்கள் எனக்கு எதிராக உள்ளார்கள்.

6. 2–ம் இன சொத்திற்குஎனது அப்பாவிற்கு எந்த பாத்தியமும் உரிமையும் இல்லை என்று அதனால் எனக்கும் எந்த பாத்தியமும் உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில் மெண்ட் பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல . அதனால் மேற்படி தானசெட்டில்மெண்ட் வைத்து நான் வழி கோருவது செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2–ம் இன சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இல்லை என்றும் என் தந்தையின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றும் அதனால் தான் அவர் சென்று வரும் பொழுது பண்ணீரிடம் பிரச்சனை ஏற்பட்டு என் தந்தையின் மீது பண்ணீர் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

7. 2ம் இன சொத்திற்கு செல்ல எனது தந்தை எந்த காலத்திலும் 1ம் இன சொத்தை பயன்படுத்தியுள்ளேன் என்றும் நானும் எந்த காலத்திலும் அவ்வாறு பயன்படுத்தவில்லை என்றும் இந்த வழக்கிற்காக வழி உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் இன சொத்திற்கு 1ம் இன சொத்தின் வழியாக சென்றிருந்தால் எனது தந்தை **வா.சா.ஆ.3** ல் மேற்படி நான் சொல்லும் மாதிரி வரைபடத்தில் உள்ள **ABCD** வழிப்பாதையை குறித்து செக்குபந்தி விவரத்தில் சொல்லியிருப்பார் என்று அவ்வாறு பயன்படுத்தாத காரணத்தால் தான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. 1–ம் இன சொத்தில் எத்தனை கிணறுகள் உள்ளது என்றால் அவர்களுடைய 1 கிணறு மற்றும் 2 ஆழ்துளை கிணறுகள் உள்ளன. பிரதிவாதிகளிடம் கிணறு, ஆழ்துளை கிணறுகள் உள்ளதால் என்னிடம் தண்ணீர் வாங்க அவசியம் இல்லை என்று நான் வழக்கிற்காக தண்ணீர் கேட்டு தர மறுத்ததால் வழி பிரச்சனை ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தண்ணீர் விற்பனை செய்ய நான் உரிமம் வைத்துள்ளேனா என்றால் எனது தந்தை பெயரில் உரிமம் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. நான் வழியை தடுத்தார்கள் என்று சொல்வது எந்த மாதம் , எந்த தேதியில் என்றால் எனக்கு தெரியாது . வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு. எந்த வருடத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் **2020 –ம்** ஆண்டு எந்த மாதத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 8 வது மாதம் இருக்கும். நான் சொல்வது போல் 1–ம் இன சொத்தில் எந்த காலத்திலும் வழியாக பயன்படுத்தவில்லை என்று தண்ணீர் கேட்டு தர முடியாததால் பிரச்சனை ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் **2020 ஆண்டு 8** வது மாதத்தில் இருந்து நான் சொல்லும் வழியை பயன்படுத்தவில்லை என்றால் பெரிய மர கட்டைகள், பில்போர், மற்றும் முற்செடிகள், மண்திட்டு வைத்து தடுத்ததால் செல்ல முடியவில்லை.

10. நான் இந்த வழக்கில் மேற்படி பொருட்களை அகற்ற சொல்லி செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. நான் 1ம் இன சொத்தில் காட்டியுள்ள எந்த வழிப்பாதையும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு மாதிரி வரைபடத்தில் மேற்கு பக்கம் என்ன சர்வே எண் சொத்து உள்ளது என்றால் ஞாபகம் இல்லை . கிழக்கு பக்கம் என்ன சர்வே எண் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது . நான் வரைபடத்தில் காட்டியுள்ள வழியில் தென்னை மரங்கள் உள்ளதா என்றால் பாதையில் இருந்து **25 அடி** தள்ளி உள்ளது. நான் சொல்லும் தென்னை மரங்கள் நான் சொல்லும் வழி பாதையில் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் கூறியுள்ளார் அதற்கு ஆட்சேபணை தெரிவித்தீர்களா என்றால் இல்லை.

11. பிரதிவதிகள் அவர்கள் நிலமான **1–ம் இன சொத்து** கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் அவர்கள் நிலங்களுக்கு செல்வதாக இருக்கும் பாதை நடபாதை என்று சொன்னால் சரியல்ல, அது வண்டி வழி பாதை தான். நான் வழக்குரை மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ளது பிரதிவாதிகள் மட்டும் பயன்படுத்தும் நடப்பாதை என்றும் அது அவர்களுடைய வீடு வரைக்கும் தான் செல்கிறது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அது 10 பேர் சென்று வந்துகொண்டிருந்த பாதைதான், வழக்கிற்கு முன் தடுத்துவிட்டார்கள்.

12. நீதிமன்ற ஆணையர் வரும் பொழுது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் வழக்குரை மாதிரி வரைபடத்தில் **ABCD** என காட்டப்பட்டுள்ள வழி பாதை நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த எந்த புகைபடத்தில் உள்ளது என்றால் **நீ.ம.சா.3 (2), ( 4), ( 16), (18), (19)** உள்ளது. நான் காட்டியுள்ள எந்த புகைப்படத்திலும் வண்டி வழி தடமாக இல்லை என்றும் அது நடப்பாதை தடமாகதான் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்ததால் வண்டிகள் செல்லாமல் செடிகள் முளைந்துள்ளது. பிரதிவாதிகள் மட்டும் தான் அந்த பாதையை நடப்பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, வண்டிகள் மற்றும் டிராக்டர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

13. நான் சொல்லும் பாதை வண்டி பாதை இல்லை என்றும் அது நடப்பாதை என்பதால் தான் ஆணையர் அதைப் பற்றி விரிவாக வண்டி பாதை சொல்லவில்லை என்றும் புகைப்படத்திலும் அவ்வாறு வண்டி வழியாக இல்லை என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.9** யார் வாங்கினார் என்றால் என் தந்தை வாங்கினார். அந்த புல வரைபடத்தில் மாதிரி வரைபடத்தில் இருக்கும் பாதை உள்ளதா என்றால் உள்ளது. **வா.சா.ஆ.9** ல் நன் சொல்லும் பாதைக்கு தனியாக எந்த உட்பிரிவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் நீல அகலம் குறிப்பிடப்பட்வில்லை. **வா.சா.ஆ. 9** புல வரைபடம் எத்தனை வருடத்திற்குரிய வரைபடம் என்றால் தெரியாது. தற்போது உள்ள புல வரைபடத்தில் நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் தற்போது உள்ள புல வரைபடம் என்றால் சரிதான். **சர்வே எண். 125** க்கான புல வரைபடம்

சான்றிட்ட நகல், **பி.வா.சா.1.** வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவலர் தான் சான்றிட்டுள்ளார் என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது . ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

14. **பி.வா.சா.ஆ.1** தற்போதைய வருவாய் துறையில் **10.02.1987** தேதியில் உள்ளது என்றால் சரிதான் . நான் **பி.வா.சா.ஆ.1** ஆவணம் தான் வழக்கு தாக்கல் செய்யும் போது 5வது ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்குரை ஆவணம் 5ம் **பி.வா.சா.ஆ1ம்** ஒரே ஆவணம் தான் என்றால் சரிதான். 2ம் இன சொத்திற்கு 1ம் இன சொத்தின் வழியாக தான் செல்ல வேண்டி அவசியம் இல்லை என்றும் 2ம் இன சொத்திற்கு மேற்கு பக்கத்தில் உள்ள குப்பன் வகையறா பயன்படுத்தும் மண் சாலை வழியாகவும் 2ம் இன சொத்திற்கு சென்றடையலாம் என்று சொன்னால் சரியல்ல.

15. 2ம் இன சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள சின்னராஜ் வகையறா , பண்ணீர், நாராயணன் மற்றும் கமலநாதன் ஆகியோர் நிலத்தில் உள்ள மண் சாலை வழியாகவும் சென்றடையலாம் என்று சொன்னால் பயன்படுத்த முடியாது, தூரமாக உள்ளது. 1-ம் இன சொத்தை விட 2ம் இன சொத்து **2 அடி** பள்ளத்தில் உள்ளது. 2-ம் இன சொத்து சுமார் **5-7** அடி பள்ளத்தில் உள்ளது என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . எனக்கு 2ம் இன சொத்து உரிமையே இல்லாத நிலையில் 1ம் இன சொத்தின் வழியாக பாதை கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.1** ல் வழி பாதை இல்லை என்ற விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆவணங்களை எடுக்கும் போது தான் தெரியும்.

16. எனது தந்தைக்கும் பண்ணீர் என்பவருக்கும் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டதா அதற்கு பிறகா என்றால் அதற்கு முன்பு ஏற்பட்டது . என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் மீது கொடுக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான் . அதில் நான் 2வது குற்றம் சாட்டப்பட்டவராக காட்டப்பட்டுள்ளேன் . சிங்காரபேட்டை காவல் நிலைய **குற்ற எண்.816/2020 முதல் தகவல் அறிக்கை பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் , பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சி தற்போது அசல் வழக்கானது இந்த முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டது என்று கூறுகிறார்.

17. நான் சொல்லும் வழக்கு மூலம் தவறு என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தவறு என்றும் அதனால் கிடைக்கதக்தல்ல என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

G AMAR ANAND
DISTRICT MUNSIF, UTHANGARAI
Digitally signed by G AMAR ANAND
Location: KRISHNAGIRI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஊத்தங்கரை.